**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தாராபுரம்,**
**முன்னிலை : திரு.R.பாண்டி மகாராஜா.,B.Sc.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, தாராபுரம்**
2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ம் நாள் புதன்கிழமை
**இ.ம.எண்.7/2025**
**in**
**அ.வ.எண்.203/2012**

1. துரைசாமி
2. ரங்கசாமி
3. சின்னச்சாமி ஆகியோர் சார்பில் அவர்களது
பொது அதிகார முகவர் துரைசாமி

.... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. பழனிச்சாமிகவுண்டர் (இறப்பு)
2. செல்லமுத்து

.... 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

3. சரவணன்
4. கலையரசன்

...3, 4 எதிர்மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகளாக
கட்சி சேர்க்கப்பட வேண்டிய நபர்கள்

இம்மனுவானது 02.08.2025 அன்று இறுதியாக என் முன்னர் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் திரு.K.பன்னீர்செல்வம்.,B.A.,B.L., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.C.கருணாமூர்த்தி,B.Sc.,B.L., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

இந்த மனுவில் கோரியுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டி, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6, விதி 17 மற்றும் 18–ன் படி இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :**

இந்த மனுவில், 1–ம் பிரதிவாதி பெயரில் பாகப்பிரிவினைக்கும்,



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.08.06 17:13:11 +0530

தனிசுவாதீனத்திற்கும் தாக்கல் செய்த நிலையில் இருந்தபோது அவர் இறந்துவிடவே அவரது வாரிசான 2-ம் பிரதிவாதி செல்லமுத்து வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டார். இந்நிலையில், 2-ம் பிரதிவாதியின் மக்களான 3, 4 எதிர்மனுதாரர்கள் இருவரும் இறந்துபோன 1-ம் பிரதிவாதியானவர் தனது பாகத்தை 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்படுத்தி 10.01.2020 தேதியில் உயில் சாசனம் எழுதி வைத்திருப்பதாக கூறி மோசடியாக உயில்சாசனம் தயார் செய்து அதை வைத்து தங்களை மேற்படி வழக்கில் 3, 4 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்த வேண்டி இ.ம.எண்.03/2023 என்ற எண்ணில் மனு கொடுத்து அது கடந்த 02.09.2023 தேதியில் தள்ளுபடியானது. அதன் பேரிலான சென்னை உயர்நீதிமன்ற மேல்முறையீடு CRP.No.1073/2024-ல் மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு கடந்த 18.03.2025 தேதியில் உத்திரவு பிறக்கப்பட்டுள்ளது. ஆகவே சென்னை உயர்நீதிமன்ற உத்திரவுப்படி வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டி இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது

<u>2. 2-ம் எதிர்மனுதாரர் பட்சம் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>

இந்த எதிருரையில், மனுதாரர் உயர்நீதிமன்ற உத்தரவின்படி 3, 4 எதிர்மனுதாரர்கள், 3, 4 பிரதிவாதிகளாக சேர்த்துவதற்கு மட்டுமே உத்தரவாகியுள்ளது. மனுதாரர் புதியதாக கட்சி சேர்த்தும்படி கோரிய மனு மீது நடவடிக்கை எடுக்காமல் மனுவில் 6(b) என்று ஒரு பத்தியைச் சேர்த்து புதிய விபரம் கூறி திருத்தம் செய்யக் கோரிய மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவாக வேண்டும். மேலும், கட்சி சேர்த்துமாறு மனுச் செய்த மனுதாரர் மனுவில் என்ன விபரம் கூறியுள்ளாரோ அதனை மட்டுமே திருத்த வேண்டுமே தவிர புதிய விபரத்தைச் சேர்த்த உரிமையில்லை. எனவே இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று பிரார்த்திக்கப்படுகிறது.



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.08.06 17:13:18 +0530

3. இரு தரப்பிலும் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டன.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்?

இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்.

**<u>5. தீர்வு:–</u>**

5.1. இம்மனுவின் அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் 1–ம் பிரதிவாதிக்கு எதிராக பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த வழக்கில் சரவணன் மற்றும் கலையரசன் ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்க அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவான இ.ம.எண்.03/2023–ஆனது 02.09.2023–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் CRP (PD) No.1073/2024–ல் 18.03.2025–ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில் இந்நீதிமன்றத்தினால், இ.ம.எண்.03/2023–ஆனது 02.09.2023–ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பானது ரத்து செய்யப்பட்டது. அதனடிப்படையில், மேற்காணும் சரவணன், கலையரசன் ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.2. அதேவேளையில், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில் வழக்குரையில், 2 பத்திகளை சேர்க்கும் வகையில் இந்த திருத்த மனுவானது அமைந்துள்ளதை காண முடிகிறது. இந்நிலையில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் மேற்காணும் சீராய்வு மனுவில்,



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.08.06 17:13:27 +0530

தரப்பினர்களை மட்டுமே சேர்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், வழக்குரையில் 2 பத்திகளை சேர்ப்பதற்காக இடம் பெற்றுள்ள திருத்தங்கள் இந்த மனுவின் மூலம் ஏற்படுத்த இயலாது என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

முடிவாக, மேற்காணும் பரிசீலனையின் அடிப்படையில், இந்த மனுவானது இந்நீதிமன்றத்தால் பகுதியாக அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. அதனடிப்படையில், இந்த மனுவில் கோரியுள்ளவாறு சரவணன் மற்றும் கலையரசன் ஆகியோர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்ப்பது குறித்த திருத்தங்கள் மட்டும் அனுமதிக்கப்படுகிறது. இந்த வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு செலவுத் தொகை எதுவும் உத்தரவிடப்படவில்லை.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 06.08.2025 ம் தேதி கையெழுத்து செய்யப்பட்டது.

PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.08.06 17:13:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.

<u>மனுதாரர்கள் & எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி & சான்றாவணங்கள்</u> – இல்லை

PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.08.06 17:13:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி
தாராபுரம்.